போன்ற இடங்களுக்கெல்லாம் நிதி ஒதுக்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்த அந்த சாலைகளைச் சீர்செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கப்படும். பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சில இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான இடம் கிடைப்பதில்லை. சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு நாம் ஓர் இடத்தை தேர்வு செய்வோம். ஆனால், அந்த இடத்தில் உள்ள பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். நிறைய இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதில்தான் பிரச்சினை உள்ளது; road laying ஒரு பிரச்சினையே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் அந்த மாதிரியான பிரச்சினை இல்லையென்றால், பாதாள சாக்கடைத் திட்டம் விரைவில் முடிக்கப்படும். இந்த பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் எத்தனை சதவிகிதம் முடிந்துள்ளது, இந்தப் பணிகளை முடிப்பதற்கு இன்னும் என்னென்ன தேவை போன்றவை குறித்த ஆய்வுக் கூட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடத்தி இருக்கின்றார்கள். கண்டிப்பாக இந்தத் திட்டம் விரைவாக முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

பொறியியல் கல்லூரி

***108—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017 ஜூலை 6]

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தெழுத்தில் பெயர்; எட்டு திசையில் புகழ், தனியாய் வாழ்ந்தார், ஆனால் தனக்காக வாழவில்லை. யாரும் விண்ணையும், மண்ணையும் உம்போல் ஆளவில்லை. மக்களைக் கவனித்த நீங்கள், இதயத்தையும் கவனித்திருக்கலாம். மக்களோடு மக்களாய், இன்னும் கொஞ்ச நாள் பயணித்திருக்கலாம் என்று தமிழக மக்கள் அனுதினமும் ஏங்கித் தவிக்கும் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். அம்மாவின் நல்லரசை வல்லரசாக தலைமையேற்று நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, இந்த அவையை நடுநிலையோடு நடத்தி, அவையின் மாண்பினைக் காத்திடும் எதையும் தாங்கும் இதயமாய் அமைந்திருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 10–35

நான் சார்ந்த குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய தொகுதி. அங்கு 2 நகராட்சிகள், 2 ஒன்றியப் பகுதிகள் உள்ளன. அது சுமார் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் வாக்காளர்களையும், 10 இலட்சம் மக்கள்தொகையையும் கொண்ட பகுதியாக இருக்கிறது.

அங்குள்ள மாணவர்கள் பொறியியல் கல்வி பயில சுமார் 40 கி.மீ. தூரத்திலுள்ள வேலூருக்கும், 50 கி.மீ. தூரத்திலுள்ள பர்கூருக்கும் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மாணவர்களின் உயர் கல்வியைக் கருத்திற்கொண்டு, எனது தொகுதியில் ஓர் அரசு பொறியியல் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வேலூரை மையமாகக் கொண்ட அரசு பொறியியல் கல்லூரியில், ஒப்பளிக்கப்பட்ட 300 இடங்களில், கடந்த ஆண்டு மாணவர்களின் சேர்க்கை 258 இடங்களுக்கு மட்டும்தான் நடைபெற்றிருக்கிறது. அவற்றில் 42 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள வேலூர் மாவட்டத்தில் 17 சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அங்கு 7,624 மாணாக்கர்கள் சேரக்கூடிய வகையில் இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், 2,431 இடங்கள் மட்டும்தான் நிரப்பப்பட்டுள்ளன. ஆகவே, பொறியியல் கல்லூரிகளில் இருக்கின்ற இடங்களுக்குத் தேவையான அளவிற்கு மாணவர்களின் சேர்க்கை அந்தப் பகுதியில் இல்லையென்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்ட அந்தப் பகுதியில் பொறியியல் கல்லூரி தொடங்குவதற்குண்டான சாத்தியக்கூறு குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை பின்வரும் காலங்களில் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடம் குடியாத்தம் அரசு கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டிற்கான சேர்க்கைக்கு 3,500 விண்ணப்பங்கள் வரப்பெற்றிருக்கின்றன. ஆனால், இடப் பற்றாக்குறையின் காரணமாக, சுமார் 500 மாணவர்களுக்கு மட்டும்தான்* admission *கிடைத்துள்ளது. மாணவிகள் சுமார் 700–க்கும் மேற்பட்டோர்,* admission *கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். எனவே, பெண்கள் உயர் கல்வியை ஊக்குவிக்கும், குறிப்பாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின பெண்களின் கல்வியை எப்போதும் ஊக்குவிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் பயணிக்கும் இந்த அரசு, நான் சார்ந்த தொகுதியில் பேரணாம்பட்டு நகராட்சிப் பகுதியில் ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடம் மற்றும் கட்டடங்களும் தயாராக உள்ளன என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய குடியாத்தம் அரசு கலைக் கல்லூரியில், விண்ணப்பங்கள் அதிக எண்ணிக்கையில் பெறப்பட்டிருகின்றன என்றும், அவற்றின் சேர்க்கைக்கு போதுமான இடங்கள் அங்கு இல்லையென்றும் கோடிட்டுக்காட்டினார்கள். எந்த ஒரு மாணவனும், விண்ணப்பிக்கின்றபோது ஒரே கல்லூரிக்கு மட்டும் விண்ணப்பம் செய்வதில்லை. பல கல்லூரிகளில் விண்ணப்பிக்கிறார்கள். அதன் அடிப்படையில், கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசானது, மாணவர்களின் சேர்க்கைக்கு கல்லூரிகளில் இடம் தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, அரசுக் கல்லூரிகளில் 20 சதவிகிதம் மாணவர் சேர்க்கை கூடுதலாகவும், சுய நிதிக் கல்லூரிகளில் இன்றைக்கு, 10 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கை கூடுதலாகவும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 15 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கை கூடுதலாகவும், வாய்ப்பினை உருவாக்கித் தந்து, யார் யார் உயர் கல்வியைப் பெற வேண்டுமோ, அத்தனை பேருக்குமே உயர் கல்வியைத் தருகின்ற நோக்கத்தோடு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர் கல்வி பயில செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அந்தப் பகுதியில் கூடிக்கொண்டே இருக்கிறது என்பதைக் கோடிட்டுக்காட்டியிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்றமுகத்தான், அந்தப் பகுதியில், பெண்களுக்கென்று தனியாக புதியதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவைப்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, அதைக் கருணையோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாணபுமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. ப. ரங்கநாதன் அவர்கள், (குறுக்கீடு) உங்களைத்தான் அழைத்தேன்.*

[2017 ஜுலை 6

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தனியார் பொறியியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டில் மாணவர்கள் எவ்வளவு எண்ணிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பது ஒன்று. இரண்டாவது, பரவலாக இருக்கிற ஒரு செய்தி, கல்விக் கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளதாக ஒரு தகவல் வந்துள்ளது. அது உண்மையா?

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், 1, 2 எல்லாம் வேண்டாம். ஒரே ஒரு கேள்விதான்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதாவது, தரமில்லாத கல்லூரிகள் என்று தரம் பிரித்து அறிவிக்கிறீர்கள். அந்தக் கல்லூரிகளின் தரத்தை எதனடிப்படையில் பிரிக்கிறீர்கள்? தரமுள்ள கல்வி நிலையங்கள் எத்தனை? தரமில்லாத கல்வி நிலையங்கள் எத்தனை? அப்படி தர வரிசை பட்டியலில் தரம் குறைவாக உள்ள கல்வி நிலையங்களை மூடுவதற்கு நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதல் கேள்வி, கடந்த 2016–2017 ஆம் ஆண்டிலே பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கை 1,50,599; ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 2,77,061; இரண்டாவது கேள்வி, தரம் உள்ள கல்லூரி, தரம் இல்லாத கல்லூரி என்று அரசு நிர்ணயிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். தரம் உள்ள கல்லூரி, தரமில்லாத கல்லூரி என்று அரசு என்றைக்குமே எந்தக் கல்லூரியையும் நிர்ணயிப்பதில்லை.* Counselling *நடக்கின்றபொழுது தர வரிசைப் பட்டியலில் உள்ளபடி கல்லூரிகளை மாணவர்கள் அவர்களாகவே தேர்வு செய்துகொள்கிறார்கள். தரமில்லாத கல்லூரி என்றால்,*

2017 ஜூலை 6]

அடிப்படை வசதிகள், infrastructure குறைவாக இருக்கிற கல்லூரி மற்றும் தகுதியான ஆசிரியர்கள் இல்லாத கல்லூரியாகும். ஆய்வு செய்து, அதனடிப்படையில் எந்தக் கல்லூரியிலே infrastructure குறைவாக இருக்கிறது; ஆசிரியர் பெருமக்கள் இல்லை என்பதைத்தான் அரசு இன்றைக்குக் கோடிட்டுக் காட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்விக் கட்டணத்தைப் பொறுத்தவரை, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று முடிவெடுத்து, கடந்த 2012–2013 ஆம் ஆண்டிலே பொறியியல் கல்லூரிகளுக்கு கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. அந்த வரையறை முடிந்தும், இரண்டு ஆண்டுகளாக கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும், ஆனால், 5 ஆண்டு காலமாக அரசு ஏன் கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்யவில்லை என்று பொறியியல் கல்லூரிகள் சங்கம் விண்ணப்பித்ததன் அடிப்படையிலே, இன்றைக்கு மத்தியிலே கிருஷ்ணா Committee கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்து, இந்தத் தொகைக்கு மிகைப்படாமல் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

கல்லூரிகளை X, Y, Z என்று 3 பகுதிகளாக பிரித்திருக்கிறார்கள். X பகுதியிலே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு ரூ.1,58,300/–க்கு மிகாமலும், Y பகுதியிலே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு ரூ.1,50,500/–க்கு மிகாமலும், Z பகுதியிலே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கு ரூ.1,44,900/–க்கு மிகாமலும் கல்விக் கட்டணத்தை வசூலித்துக்கொள்ள பரிந்துரை செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இன்றைக்கு அந்தச் சங்கத்தினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு உயர்த்தியிருக்க வேண்டிய கல்விக் கட்டணத்தை, இப்போது கிருஷ்ணா committee–யானது ரூ.10,000/–ஐ கூடுதலாக உயர்த்தி, தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. Counselling–மூலம் சேர்கின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணமாக ரூ.40,000/– லிருந்து ரூ.50,000/– வரை, counselling இல்லாமல் management Quota–வில் சேர்கின்ற மாணவர்களுக்கு ரூ.70,000/–லிருந்து ரூ.85,000/– வரை வசூலிக்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. அந்த நேரத்தில்தான் பல விஷயங்களை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும். எந்தெந்த இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி வருகிறதோ, அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுடைய இருக்கைகளில் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் என்ன கேள்வி கேட்கிறார்கள், என்ன விஷயம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால், அந்த இருக்கைகள் காலியாகவே இருக்கின்றன. அது அழகல்ல, இது முறையும் அல்ல.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதற்கான அறிவுரையை வழங்குகிறேன்.*

திரு. துரைமுருகன்: *இதை நான் இரண்டாவது முறையாக தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு நான் உரிய அறிவுரையை வழங்குகிறேன்.*

வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

146—

கூட்டுறவு நூற்பாலை

***2071—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, நாசரேத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*